## அரசு கஜானாவை காலி செய்யாமல் இருந்திருந்தால்

# குடும்பத் தலைவிக்கு ரூ.1000 திட்டத்தை செய்து முடித்திருப்போம்

## ஈரோடு பிரச்சாரத்தில் ஸ்டாலின் பேச்சு

ஈரோடு, பிப்.26–

**அரசு கஜானாவை அண்ணா தி.மு.க. ஆட்சியில் காலி செய்யாமல் இருந்திருந்தால் குடும்பத் தலைவிக்கு ரூ.1000 வழங்கும் திட்டத்தை இந்நேரம் செய்து முடித்திருப்போம் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறினார்.**

ஈரோடு கிழக்கு தொகுதி காங்கிரஸ் வேட்பாளர் ஈ.வி. கே.எஸ். இளங்கோவனை ஆதரித்து நேற்று பல்வேறு இடங்களில் மக்கள் மத்தியில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேசினார்.

ஈரோடு கிழக்கு தொகுதி பெரியார் நகர் பகுதி தேர்தல் பிரச்சாரத்தில் ஸ்டாலின் பேசியதாவது:–

இந்த கூட்டணி என்பது ஏதோ தேர்தலுக்காக உருவாக்கப்பட்ட கூட்டணி மட்டுமல்ல. நாட்டிற்காக, கொள்கைக்காக, லட்சியத்திற்காக, நம்முடைய இனம் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்காக, நம் மொழி பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்காக, நம் நாடு பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்காக உருவாக்கப்பட்ட கூட்டணிதான் இது.

நம்மை எதிர்த்து ஒரு கூட்டணி இருக்கிறது. ஆனால் அந்த கூட்டணிக் கட்சியின் தலைவர்கள் புகைப்படங்களை போஸ்டர்களில் போடக்கூடாது, பேனர்களில் போடக்கூடாது. அதுதான் அவர்கள் கூட்டணி. நான் கேட்கிறேன், இன்றைக்கு வரைக்கும் அந்த எடப்பாடி பழனிச்சாமி அண்ணா தி.மு.க.வின் சார்பில் நிறுத்தப்பட்டிருக்கும் வேட்பாளரை ஆதரித்து பேசுகிறபோது எங்காவது பிரதமர் மோடி பெயரை பயன்படுத்தி இருக்கிறாரா?

இனி நீங்கள் மோடி பெயரைப் பயன்படுத்தினாலும், பயன்படுத்தவில்லை என்றாலும் டெபாசிட் வாங்கப் போவதில்லை, அது வேறு. ஆனால் அவர்கள் போட்டியே இப்போது என்னவென்றால், ஏற்கனவே வாங்கிய ஓட்டுக்களையாவது இப்போது வாங்கவேண்டும். இல்லையென்றால் இரண்டாவது இடத்திற்காவது வர வேண்டும். டெபாசிட் தொகையை பெற வேண்டும் என்பதில்தான் இன்றைக்கு அவருடைய கவலையாக இருக்கிறதே தவிர, ஏதோ வெற்றிபெறப் போகிறோமம் என்ற அந்த நினைப்பு இல்லை.

கலைஞர் ஐந்து முறை தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்த நேரத்தில், அவர் தேர்தலை சந்தித்தபோதெல்லாம் என்ன உறுதிமொழிகளை, வாக்குறுதிகளை தேர்தல் அறிக்கை புத்தகத்தில் திருக்குறள் போன்று இரண்டு வரி இருக்கும். 'சொன்னதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம்', இதுதான் கலைஞரின் வாசகம். கலைஞருடைய மகன் ஸ்டாலினின் வாசகம் என்னவென்று தெரியுமா? 'சொன்னதை மட்டுமல்ல, சொல்லாததையும் செய்வோம்'.

### வாக்குறுதிகளை நிறைவேற்றுவோம்

நீங்கள் பார்க்கலாமே, தேர்தல் நேரத்தில் அறிவித்த திட்டங்களை மட்டுமா செய்து கொண்டிருக்கிறோம். அறிவித்த திட்டங்களிலேயே கொஞ்சம் பாக்கி இருக்கிறது, நான் இல்லை என்று சொல்லவில்லை. 85 சதவீதம் நிறைவேற்றி விட்டோம். இன்னும் மீதம் 15 சதவீதம் மட்டுமே இருக்கிறது. நான் இல்லை என்று மறுக்கவில்லை. ஐந்து வருட காலம் இருக்கிறது.

ஐந்து வருடம் மக்கள் நம்மிடத்தில் நம்பிக்கையோடு வாக்களித்து, ஆதரவு தந்து பொறுப்பை ஒப்படைத்திருக்கிறார்கள். நீங்கள் அந்த ஐந்து வருடம் ஆகுமா? என்று நினைக்காதீர்கள். அதற்கு முன்னதாகவே, மூன்று வருடத்தில் பாருங்கள், எல்லாவற்றையும் செய்துவிட்டோம் என்று சொல்கிறோமா இல்லையா என்று பாருங்கள்.

நெருங்கி விட்டோம். இன்னும் என்ன இருக்கிறது? ஒன்றே ஒன்றுதான் முக்கியமானது. மிஸ்டர் எடப்பாடி பழனிசாமி, நீங்கள் மறந்தாலும் நாங்கள் மறக்க மாட்டோம். அதை நாங்கள் மறக்கவே மாட்டோம்.

எனவே அந்த உரிமைத் தொகையைக்கூட நாங்கள் ஆட்சிக்கு வந்தவுடன் கொடுத்திருப்போம். எப்படி கொரோனாவுக்காக 4000 ரூபாய் கொடுப்போம் என்று சொன்னோம். கொடுத்தோமா? இல்லையா? உடனே கொடுத்தோமா? இல்லையா? முதல் கையெழுத்தே அதுதானே.

அடுத்த கையெழுத்து என்ன? இரண்டாவது உறுதிமொழி என்ன கொடுத்தோம்? இலவசமாக மகளிர் பேருந்தில் பயணம் செய்யலாம் என்று உறுதிமொழி தந்தோம். அதுதானே இரண்டாவது கையெழுத்து.

### கஜானா காலியாகாமல் இருந்திருந்தால்...

எனவே சொன்னது எல்லாம் செய்து கொண்டிருக்கிறோமா? இல்லையா? சொல்லாத திட்டம் என்று பார்த்தால், ஒன்று – இரண்டு இருக்கிறது. அது நீங்கள் நிதியை மட்டும் ஒழுங்காக வைத்துவிட்டு சென்றிருந்தீர்கள் என்றால், எந்தக் கடனும் இல்லாமல், கொள்ளை அடிக்காமல், ஒழுங்காக கஜானாவை காலி செய்யாமல் வைத்துவிட்டு சென்றிருந்தீர்கள் என்றால் நாங்கள் இந்நேரம் அதை செய்து முடித்திருப்போம்.

இவ்வளவு கஷ்டத்திலும், இவ்வளவு நிதிப் பற்றாக்குறையிலும், இவ்வளவு சாதனைகளையும், எப்படி செய்ய முடிகிறது என்று எல்லா மாநிலங்களும் இன்றைக்கு நம்மை பாராட்டுகிறது.

### ரூ.1000 எப்போது?

ஆயிரம் ரூபாய் குடும்பத் தலைவிகளுக்கு கொடுக்கும் திட்டத்தைப் பொறுத்தவரையில் விரைவில் நிறைவேற்றப் போகிறோம், நிறைவேற்றப் போகிறோம் என்று தொடர்ந்து சொல்லிக் கொண்டிருக்கிறோம்.

மார்ச் மாதம் இரண்டாவது வாரம் பட்ஜெட் கூட்டம். எனவே அந்த பட்ஜெட் கூட்டத்தில் எப்போது அது வரும்? எந்த தேதியில் கொடுக்கப்படும்? என்பதை திட்டவட்டமாக நாங்கள் அறிவிக்க இருக்கிறோம். யாரும் கவலைப்பட வேண்டிய அவசியம் இல்லை.

இன்றைக்கு இந்த கூட்டணியை பொறுத்தவரையில் ஒரு கொள்கை அளவில் அமைந்திருக்கும் கூட்டணி, நாடாளுமன்றத்தில் கூட்டணி அமைத்தோம். சட்டமன்றத் தேர்தலிலும் அமைத்து வெற்றி பெற்றோம். உள்ளாட்சி அமைப்புத் தேர்தலிலும் அந்த கூட்டணி தொடர்ந்தது. மிகப்பெரிய வெற்றியை பெற்றோம். இப்போதும் இந்த இடைத்தேர்தலில் அந்த கூட்டணி தொடர்கிறது. இந்த இடைத்தேர்தலில் மட்டுமல்ல, அது வரவிருக்கின்ற நாடாளுமன்றத் தேர்தலாக இருந்தாலும், அது எந்த தேர்தலாக இருந்தாலும் இந்த கூட்டணி தொடரும்.

அதுவல்ல முக்கியம். ஆனால் கொள்கை அளவில் இன்றைக்கு இருக்கிறோமா? இல்லையா?

தி.மு.க., காங்கிரஸ், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய யூனியன் முஸ்லிம் லீக், மனிதநேய மக்கள் கட்சி, விடுதலை சிறுத்தைகள், கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி, ஆதித்தமிழர் பேரவை.

### தகுதி என்ன?

இவ்வாறு பல்வேறு தோழமைக் கட்சிகளுடன் ஒருங்கிணைந்து இன்றைக்கு நாம் தேர்தல் களத்தில் நிற்கிறோம் என்று சொன்னால், இந்த நாடு காப்பாற்றப்பட வேண்டும், இந்த மொழி காப்பாற்றப்பட வேண்டும் என்பதற்காகத்தான் இந்த கூட்டணி தொடர்கிறது என்பதை நீங்கள் மறந்து விடக்கூடாது. உங்களை எல்லாம் நான் மீண்டும் மீண்டும் கேட்டுக்கொள்ள விரும்புவது கை சின்னத்திற்கு அளிக்கும் வாக்கு என்பது இந்த ஆட்சிக்கு நீங்கள் அங்கீகாரத்தை வழங்கக்கூடிய ஒரு ஆதரவாக நிச்சயமாக அமைந்திட முடியும்.

அதிலும் குறிப்பாக பெண்களுக்கு எத்தனையோ சிறப்பான திட்டங்களை எல்லாம் கொண்டு வந்து நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம்.

ஏற்கனவே நாம் ஆட்சிப் பொறுப்பில் இருந்த நேரத்தில்தான் சொத்தில் பெண்களுக்கு சம உரிமை, வேலை வாய்ப்பில் பெண்களுக்கு 30 சதவீத இட ஒதுக்கீடு (இப்போது 40%), உள்ளாட்சி அமைப்புகளில் 33 சதவீதம், இப்போது 50 சதவீதம் இடஒதுக்கீடு. இவ்வாறு எத்தனையோ திட்டங்களை சொல்ல முடியும். மகளிர் சுய உதவிக்குழுக்களை உருவாக்கி, அவர்கள் வாழ்க்கையில் வளத்தை, வசந்தத்தை ஏற்படுத்துவதற்காக எத்தனையோ நிதி ஒதுக்கீடுகளை செய்து கொண்டிருக்கிறோம்.

பள்ளியில் படித்து கல்லூரிக்குச் செல்ல முடியாத நிலையில் தவித்துக் கொண்டிருந்த சூழ்நிலையில் தவித்துக் கொண்டிருந்த குடும்பங்கள். அந்தக் குடும்பத்தின் நிலை அறிந்த காரணத்தால்தான் அந்த மாணவியருக்கு, கல்லூரிக்கு போகின்ற நேரத்தில் ஆயிரம் ரூபாய் வழங்கும் ஒரு அற்புதமான திட்டத்தை 'புதுமைப்பெண்' திட்டத்தின் மூலமாக இன்றைக்கு நாம் நிறைவேற்ற முன்வந்திருக்கிறோம்.

எனவே இவ்வாறு பல திட்டங்களை பெண்களுக்காக, மகளிருக்காக கொண்டு வந்திருக்கும் திட்டங்களை எல்லாம் அங்கீகாரம் பெற வேண்டும் என்று சொன்னால் அதற்கு இந்த தேர்தலை நீங்கள் எல்லாம் நல்ல வகையில் பயன்படுத்த வேண்டும்.

நம் வெற்றி வேட்பாளர் ஈ.வி. கே.எஸ். இளங்கோவனுக்கு கை சின்னத்தில் ஆதரவு தந்து மிகப்பெரிய வெற்றியை தேடி தர வேண்டும்.

இவ்வாறு மு.க.ஸ்டாலின் பேசினார்.




# 'தமிழ்நாட்டை சொர்க்கமாக மாற்றிட எங்களுக்கு ஒரு வாய்ப்பு தாருங்கள்': ஈரோட்டில் சீமான் பேச்சு

ஈரோடு, பிப்.26–

**'எங்களுக்கு ஒரு வாய்ப்பு தாருங்கள், தமிழ்நாட்டை சொர்க்கமாக மாற்றி காட்டுகிறோம்' என்று ஈரோட்டில் சீமான் கூறினார்.**

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில், நாம் தமிழர் கட்சி சார்பில் மேனகா நவநீதன் போட்டியிடுகிறார். இவரை ஆதரித்து கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் நேற்று ஈரோடு பன்னீர் செல்வம் பூங்கா, மரப்பாலம், மண்டபம் வீதி, மகாஜன பள்ளிக்கூடம் ஆகிய பகுதிகளில் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டு கரும்பு விவசாயி சின்னத்துக்கு வாக்குகள் சேகரித்தார்.

அதைத்தொடர்ந்து மகாஜன பள்ளிக்கூடம் அருகில் நடந்த பொதுக்கூட்டத்தில் சீமான் கலந்து கொண்டு பேசினார். அப்போது அவர் கூறியதாவது:–

மாற்றத்தை கொண்டு வர, ஊழல், லஞ்சம் அற்ற, உண்மையும், நேர்மையான நிர்வாகத்தை கொண்டு வர, மண்ணை காக்க, மக்களின் வளத்தை காக்க, எதிர்கால தமிழர்களின் நலத்தை காக்க, எங்களுக்கு மட்டும் தான் இந்த வாய்ப்பு வழங்கப்பட்டு இருக்கிறதா என்றால் இல்லை. இந்த மண்ணில் பிறந்த ஒவ்வொரு குடிமகனுக்குமான கடமையும், பொறுப்பும் என உணர்ந்து நாம் இந்த தேர்தலை அணுகவேண்டும்.

வாக்கு என்பது மக்களாட்சி தத்துவத்தை ஏற்றுக்கொண்ட நாட்டில் வாழுகின்ற குடிமக்களின் கடைசி கருவி. ஒரு வலிமை மிக்க ஆயுதம். அநீதிக்கு எதிராக அந்த ஆயுதத்தை பயன்படுத்துபவன் எவனோ அவனே ஆகச்சிறந்த குடிமகனாக இருக்க முடியும். நீங்கள் சாதி, மதங்களாக பிரிந்து நின்றால் அச்சுறுத்தப்படுவீர்கள். ஆனால் ஒரே இனமாக இணைந்து நின்றால் பாதுகாப்பாக வாழ்வீர்கள்.

### சாதி, மதத்தை விடுங்கள்

சாதி, மத உணர்ச்சிகளை பின்னுக்கு தள்ளி, நாங்கள் தமிழர்கள் என்ற இன உணர்வை முன் நிறுத்துவதால் தான் இவ்வளவு பெரிய கூட்டத்தை கூட்ட முடிகிறது. சாதி, மதத்தை விட்டுவிட்டு தமிழர்களாக கலைந்து செல்லுங்கள்.

### வாய்ப்பு தாருங்கள்

ஒரு முறை எங்களை ஆட்சியில் அமர வைத்து பாருங்கள். என் தாய் தமிழ்நாட்டை சொர்க்கமாக மாற்றி காட்டுகிறோம். பாலியல் தொந்தரவு, சங்கிலி பறிப்பு, கொள்ளை எதுவும் இருக்காது. உங்களை நம்பி நிற்கிற பிள்ளைகளை கைவிட்டு விடாதீர்கள். நீங்கள் அனைவரும் நமது வேட்பாளர் மேனகாவுக்கு ஒரு வாய்ப்பு தாருங்கள். ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் கரும்பு விவசாயி சின்னத்தில் வாக்களித்து மேனகாவை அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெற செய்யுங்கள்.

இவ்வாறு சீமான் கூறினார்.





# தி.மு.க. ஆட்சியை எடை போடும் தேர்தல்: ஸ்டாலின் பேச்சு

## வீதிகளில் நடந்து சென்று வாக்கு கேட்டார்

ஈரோடு, பிப்.26–

**தி.மு.க. ஆட்சியை எடை போடும் தேர்தல் இந்த இடைத்தேர்தல் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறினார்.**

ஈரோட்டில் தேர்தல் பிரசாரத்துக்கு வந்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வீதிகளில் நடந்து சென்று வாக்கு சேகரித்ததுடன், தொண்டர்களுடன் செல்பி எடுத்தும் மகிழ்ந்தார்.

ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் நாளை (திங்கட்கிழமை) நடக்கிறது. இதையொட்டி நேற்று நடந்த இறுதி கட்ட பிரசாரத்தில், காங்கிரஸ் கட்சி வேட்பாளர் ஈ.வி.கே.எஸ். இளங்கோவனுக்கு ஆதரவாக கை சின்னத்தில் வாக்குகள் கேட்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தீவிர பிரச்சாரம் மேற்கொண்டார். சம்பத் நகரில் பிரசாரம் செய்து கை சின்னத்துக்கு வாக்குகள் கேட்ட மு.க.ஸ்டாலின் அங்கிருந்து பெரியவலசு, பாரதி தியேட்டர், சத்தி ரோடு பஸ் நிலையம் வழியாக பொதுமக்களை சந்தித்து வாக்குகள் சேகரித்தபடி திறந்த வேனில் வேட்பாளர் ஈ.வி.கே.எஸ். இளங்கோவனுடன் சென்றார்.

பஸ் நிலையம் கடந்து சத்தி ரோட்டில் வேன் சென்றபோது திடீர் என்று வேனை நிறுத்தக்கூறிய முதலமைச்சர் வேனில் இருந்து இறங்கி நடுரோட்டில் நடந்து சென்று பொதுமக்களிடம் வாக்குகள் சேகரித்தார். முதலமைச்சருடன் வேட்பாளர் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன், அமைச்சர் சு.முத்துசாமி ஆகியோரும் சாலையில் இறங்கி நடந்தனர்.

### செல்பி

முதலமைச்சர் தங்கள் வீதியில் வருவதை பார்த்த தொண்டர்கள் பலரும் அவருடன் செல்பி எடுக்க ஆசைப்பட்டனர். அவர்களுடன் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினும் மகிழ்ச்சியுடன் செல்பி எடுத்தனர். சத்தி ரோடு முதல் மஜீத் வீதிவரை அவர் வீதியில் நடந்து சென்று வாக்குகள் சேகரித்தார். முதலமைச்சரின் இந்த அதிரடி பிரச்சாரம் பொதுமக்களிடம் மிகுந்த வரவேற்பை பெற்றது.

பின்னர் கருங்கல்பாளையம் காந்தி சிலை பகுதியில் பேசிய அவர், அங்கிருந்து கே.என்.கே.ரோடு, மூலப்பட்டறை, பவானி ரோடு வழியாக பி.பி.அக்ரகாரம் பகுதிக்கு சென்று பிரச்சாரம் செய்தார். பின்னர் பூம்புகார் நகர், காந்தி நகர், வில்லரசம்பட்டி வழியாக சென்றார்.

சம்பத் நகர், பிராமண பெரிய அக்ரஹாரம், பெரியார் நகர் உள்ளிட்ட பகுதிகளில் பிரச்சாரம் மேற்கொண்ட அவர் பேசியதாவது:–

தி.மு.க. ஆட்சி அமைந்ததும், மகளிருக்கான இலவசப் பேருந்து பயணம், பள்ளி மாணவர்களுக்கான காலை உணவுத்திட்டம், கல்லூரி மாணவியருக்கு மாதம் ரூ.1,000 உதவித்தொகை, ஒன்றரை லட்சம் விவசாயிகளுக்கு இலவச மின்சார இணைப்பு உள்ளிட்ட பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளோம். ஆனால், தேர்தல் அறிக்கையில் அறிவித்த எந்தத் திட்டத்தையும் நிறைவேற்றவில்லை என எதிர்க்கட்சி தலைவர் பழனிசாமி கூறி வருகிறார். நான் பட்டியலிட்ட திட்டங்களை பார்த்தாவது அவர் தெரிந்து கொள்ள வேண்டும்.

### பாடம் புகட்டுங்கள்

தமிழக அரசு 2 முறை நிறைவேற்றி அனுப்பிய 'நீட்' தேர்வு விலக்கு மசோதா குறித்து கவர்னரோ, மத்திய அரசோ சிந்திக்கவோ, கவலைப்படவோ இல்லை. ஆனால் எனது ஆட்சி காலத்திலேயே நீட் தேர்வுக்குரிய விலக்கை பெற்றுவிட வேண்டும் என்பதே லட்சியம். அதை நிறைவேற்றுவதற்கு அனைத்து முயற்சிகளிலும் ஈடுபட்டு வருகிறோம்.

சிறுபான்மை மக்களை அச்சுறுத்தும் குடியுரிமை திருத்தச் சட்டத்துக்கு ஆதரவாக மாநிலங்களவையில் அண்ணா தி.மு.க. வாக்களித்ததால்தான், அந்த சட்டம் நிறைவேறியது. இதை கவனத்தில்கொண்டு இத்தேர்தலில் அண்ணா திமுகவுக்கு சிறுபான்மை மக்கள் பாடம் புகட்ட வேண்டும்.

### ஆட்சியை எடைபோடும் தேர்தல்

முன்னாள் முதல்வர் ஜெயலலிதா மரணம் குறித்து அமைக்கப்பட்ட விசாரணை ஆணையம் அண்ணா திமுக ஆட்சியில் 4 ஆண்டுகள் செயல்படாமல் பெயரளவில் இருந்தது. திமுக ஆட்சிக் காலத்தில் விரைந்து விசாரணை நடத்தப்பட்டு, ஆணையத்தின் அறிக்கையை சட்டப்பேரவையில் வெளியிட்டோம். இதுபோல கோடநாடு வழக்கில் தொடர்புடையவர்கள் அனைவரும் கட்டாயம் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு தண்டிக்கப்படுவர்.

இந்த ஆட்சி முறையாக நடக்கிறதா என்பதை, எடைபோடும் இந்த இடைத்தேர்தலில், வாக்காளர்கள் நல்ல தீர்ப்பு வழங்க வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

மாலையில் மீண்டும் பிரசாரத்தை தொடங்கிய முதலமைச்சர் சம்பத் நகர், இடையன்காட்டு வலசு, சின்னமுத்து வீதி வழியாக முனிசிபல்காலனி வந்தார். அங்கு கருணாநிதி சிலை வளாகம் பகுதியில் பொதுமக்களிடம் பேசி வாக்குகள் சேகரித்தார். தொடர்ந்து மேட்டூர் ரோடு, பன்னீர்செல்வம் பூங்கா வழியாக பெரியார் நகர் பகுதியில் பிரச்சாரம் செய்தார்.

**BEFORE THE HONOURABLE X ASST. CITY CIVIL COURT, CHENNAI**
**E.P.No. 5326 OF 2022**
**IN**
**ARC No. 320 OF 2021**

Margadarsi Chits Private Limited
...Petitioner/Decree Holder
Rep by Foreman
Branch:Anna Salai,
A Wing, Flat No.1 &2 , 2nd Floor, Parsn Manere, No.602, Anna Salai, Chennai-600 006.
Versus
M.Jeevanantham and others
..Respondents/ Judgement Debtor

To
M.Jeevanantham -JD1
(S/o.E.Murugan)
PF. A/C No. 15206MAS337
Ac Coach Attender,
Electrical Department,
SSE/AC/MAS,
Basin Bridge Yard,
Southern Railway,
Chennai Division,
Chennai-600 003.
S.Baskaran -JD2
(S/o.E.Subramaniyam)
Emp No. 15200420244
Technician-III,
Electrical Department,
SSE/AC/MAS,
Basin Bridge Yard,
Southern Railway,
Chennai Division,
Chennai-600 003.
P.Prathaban -JD3
(S/o.G.Paramasivam)
Emp.No.15206MAS736
K.H Helper,
Electrical Department,
SSE/AC/MAS,
Basin Bridge Yard,
Southern Railway,
Chennai Division,
Chennai-600 003.
M.P.Shenbhagaraman –JD4
(S/o.M.S.Prakasam)
PF AC/No.15212MAS678
Ac Coach Attender,
Electrical Department,
SSE/AC/MAS,
Basin Bridge Yard,
Southern Railway,
Chennai Division,
Chennai-600 003.
J.Benjamin -JD5
(S/o.S.Joseph)
Emp.No.15204458023
Technician-III,
Electrical Department,
SSE/AC/MAS,
Basin Bridge Yard,
Southern Railway,
Chennai Division,
Chennai-600 003.

Please take notice in the above Execution Petition filed against all of you for attachment of your Salaries, the Honourable X Asst. City Civil Judge, Chennai ordered notice to all of you returnable by 29-03-2023 at 10.30 a.m. Please be present on that day at the aforesaid Court or the matter will be decided exparte.

M.DURAIRAJ
Counsel for Petitioner/ Decree Holder

## NOTICE OF LOSS OF SHARE CERTIFICATES

Notice is hereby given that the following share certificates issued by Ashok Leyland Limited in my / our name had been lost/misplaced:

| Folio No. | Name of the Shareholder | Cert.No. | Distinctive Nos. | | No of Share |
|---|---|---|---|---|---|
| | | | From | To | |
| 32231 | BALRAM ANIL KUMAR MALIK | 49790 | 2659610270 | 2659615269 | 5000 |

Due notice thereof has been given to the Company and I/ We have applied to the Company for the issue of Duplicate Share Certificates.
The public is hereby warned against purchasing or dealing in any way with the above Share Certificate(s). Any person who has any claim in respect of the said Share Certificate(s) should lodge such claim with Ashok Leyland Limited, No.1, Sardar Patel Road, Guindy, Chennai – 600032 or its Share Transfer Agents, Integrated Registry Management Services Pvt. Ltd., "Kences Towers", 2nd Floor, No.1 Ramakrishna Street, North Usman Road, T Nagar, Chennai – 600 017, within 15 days of publication of this notice else the Company will proceed to issue duplicate certificate(s), without further intimation

Place : Chennai
Date : 25/02/2023

Balram ( Deceased)
Mr. Anil Kumar Malik
E-53, Pallavpuram, Phase 1
Meerut, Uttar Pradesh -250 110

## TULSYAN NEC LIMITED

**Regd. Off. :** 1st Floor, Apex Plaza, 3, Nungambakkam High Road, Chennai - 600 034. **Phone :** 044 - 6199 1060.
**Fax :** 044 - 6199 1066. **email :** investor@tulsyannec.in
**Website :** www.tulsyannec.in **CIN No. :** L28920TN1947PLC007437

**Extract of Unaudited Standalone and Consolidated Financial Results for the Quarter and Nine Months ended December 31, 2022 under Ind AS**

(₹ in Lakhs)

| Sl. No. | Particulars | Standalone | | | Consolidated | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | Quarter ended December 31, 2022 (Unaudited) | Year to date figures December 31, 2022 (Unaudited) | Previous quarter ended December 31, 2021 (Unaudited) | Quarter ended December 31, 2022 (Unaudited) | Year to date figures December 31, 2022 (Unaudited) | Previous quarter ended December 31, 2021 (Unaudited) |
| 1. | Total Income from Operations | 21,575.61 | 72,151.31 | 15,877.78 | 22,345.17 | 78,904.62 | 18,487.98 |
| 2. | Net Profit/(Loss) for the period (before tax and exceptional items) | (2,505.17) | (1,837.80) | (2,143.69) | (2,709.33) | (2,106.82) | (2,147.53) |
| 3. | Net Profit/(Loss) for the period before tax (after exceptional items) | (2,505.17) | 20,068.37 | (2,181.02) | 19,196.83 | 19,799.35 | (2,184.87) |
| 4. | Net Profit/(Loss) for the period after tax (after exceptional items) | (2,505.17) | 20,068.37 | (2,181.02) | 19,196.83 | 19,799.35 | (2,184.87) |
| 5. | Other comprehensive Income (net of tax) | (14.09) | (42.28) | (20.44) | (14.09) | (42.28) | (20.44) |
| 6. | Total comprehensive Income for the period [comprising Profit/(Loss) for the period (after tax) and Other comprehensive Income (after tax)] | (2,519.27) | 20,026.09 | (2,201.46) | 19,182.74 | 19,757.07 | (2,205.31) |
| 7. | Equity Share Capital (face Value of Rs.10 per share) | 1,471.38 | 1,471.38 | 1,471.38 | 1,471.38 | 1,471.38 | 1,471.38 |
| 8. | Reserves (excluding Revaluation Reserve) as shown in the Audited Balance Sheet of the previous year | | | | | | |
| 9. | Earnings Per Share (of Rs.10/- each) (for continuing and discontinued operations) (a) Basic (b) Diluted | (17.03) (17.03) | 136.39 136.39 | (14.82) (14.82) | 130.47 130.47 | 134.56 134.56 | (14.85) (14.85) |

**NOTES :**
1. The above results were reviewed by the Audit Committee and thereafter approved and taken on record by the Board Of Directors at their meeting held on February 25, 2023.
2. The statement has been prepared in accordance with the companies (Indian Accounting Standards) Rules, 2015 (Ind AS) prescribed under section 133 of the companies Act, 2013 and other recognised accounting practices and policies to the extent applicable.
3. The above is an extract of the detailed format of the unaudited financial results for the quarter and six months ended December 31, 2022 filed with the Stock Exchange under Regulation 33 of the SEBI (Listing and Obligations Disclosure Requirements) Regulations, 2015. The full format of the Unaudited Financial Results for the Quarter and Nine months ended December 31, 2022 are available on the website of the BSE Limited i.e. **www.bseindia.com**, on the Stock Exchange where the Company's shares are listed and on the website of the Company i.e., **www.tulsyannec.in**
4. The previous year figures have been regrouped/re-classified wherever necessary

**for Tulsyan NEC Limited**
**Sd/-**
**Sanjay Tulsyan**
Managing Director
DIN : 00632802

Place : Chennai
Date : 25th February, 2023